**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

## OS. No.415/2023

**23.03.2026**

## P.W.1- அருண்பிரகதீஷ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் எங்களுக்கும், மாயத்தேவர் மகன் சடைமாயத்தேவா் என்பவருக்கும் பூர்வீகமாய பாத்தியப்பட்ட சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சடைமாயத்தேவருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. வழக்கிற்காக சுய சம்பாத்திய சொத்தை பூர்வீக சொத்து என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்களும், பிரதிவாதிகளும் எந்த ஒரு காலத்திலும் தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எனது தாத்தா சடைமாயத்தேவா் பெயரில் ஆவணங்கள் உள்ளதா என்றால் தெரியாது. ஆனால் அன்னக்கருப்பாயி பெயரில் உள்ளது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களில் எனது பெயரோ, 2ம் வாதி மற்றும் எனது அம்மா பெயரோ கூட்டாக இல்லை என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி ஆவணங்களில் எங்களது பெயா்களை சோ்க்க உசிலம்பட்டி, ஆா்டிஓ விடம் எந்த முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்துக்களில் 7ம் பிரதிவாதி ரவி என்பவருக்கு, வாதிகள் 27.06.2022ம் தேதியில் பத்திரம் பதிந்து கொடுத்துள்ளாா்கள் என்றால் சரிதான். மேற்படி கிரையம் சட்டப்படியான கிரையம் என்றால் சரியல்ல. எனது தகப்பனாா் உயிருடன் உள்ளாா். அவா் இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி. 4ம் பிரதிவாதியின் மனைவி எனது அம்மா சாந்தி என்றால் சரிதான். எனது பெற்றோா்கள் கடந்த 2017ம் ஆண்டு முதல் பிரிந்து வாழ்ந்து வருகிறாா்கள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியான எனது தகப்பனாா், சென்னை குடும்பநல நீதிமன்ற எம்.சி.எண்.155-2020ல் எங்களுக்கு மாதந்தோறும் ரூ.30,000 செலுத்தி வருகிறாா் என்றால் சரியல்ல. 2ம் வாதிக்கும்,

எனது அம்மா சாந்திக்கும் ஜீவனாம்சமாக ரூ.27,000 செலுத்தி வருகிறார். மேற்படி மனுவின் உத்தரவின் பேரில் எனது தகப்பனார் எனது அம்மா மற்றும் தங்கைக்கு ரூ.20 லட்சம் வரையில் நீதிமன்றம் மூலம் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் பிலிப்பைன்ஸ் நாட்டில் மருத்துவர் படிப்பு முடித்து மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது மருத்துவ படிப்புக்கு எனது தகப்பனார் ரூ.30 லட்சம் வரை கடன் வாங்கி படிக்க வைத்து, அந்த கடனை தற்போது வரை அடைத்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரிடம் சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் பேசி மேலும் ரூ.50 லட்சம் வரை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார், எனது தாயார் சாந்தி மீது சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP.1084/2021 மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 21.10.2024ம் தேதியில் சேர்ந்து வாழக்கூறி தீர்ப்பு பகரப்பட்டது என்றால் தெரியாது. எனது அம்மா, எனது தகப்பனாரை விட்டு பிரிந்து வாழ்வதால் எனது தகப்பனாரை அலைக்கழிக்க பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியான எனது தந்தை உயிருடன் இருப்பதால் எங்களுக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் பிரதிவாதிகள பெயர்களில இருப்பதாலும், 4ம பிரதிவாதி உயிருடன் இருப்பதாலும் இந்த வழக்கில் எங்களுக்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.23 18:28:02 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.